**சின்ன சின்ன செய்திகள்**



**கோ.12 ரக சோளம்** : மானாவாரி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு இந்த ரகம் உருவாக்கப்பட்டுள்ளது. குளிர்கால மானாவாரி கரிசல் நில பகுதிகளுக்கு ஏற்றது. கோ.8 சோளத்தை விட 22.4 சதம் கூடுதல் மகசூல் கொடுக்கக்கூடியது. சோதனையில் அதிக பட்சமாக ஒரு எக்டருக்கு 5300 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. மானாவாரியில் அதிக தானிய மகசூலும், அதிக அளவு தீவன மகசூலும், எக்டருக்கு 11.9 டன் கொடுக்கக் கூடியது. குருத்து ஈ தண்டு துளைப்பான், அடிச்சாம்பல் நோய் ஆகியவற்றின் தாக்குதலை தாங்கி வளரும் தன்மையுடையது. தென்மாவட்டங்களில் மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது. கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் போது நன்கு செரிமனமாக்கும் தன்மைகொண்டது. தொடர்புக்கு: பாலகுரு, சின் ஜெண்டா, கிருஷ்ணகிரி. போன்: 94422 14885. - **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**